தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.maveerarnaal.ch / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2020

## 19 வயதுப்பிரிவு

(01.01.2001 – 31.12.2002 வரையில் பிறந்தோர்)

### தமிழீழ மருத்துவப்பிரிவு

தமிழீழ மண்மீட்புப் போராட்ட வரலாற்றில் தமிழீழ மருத்துவத்துறையின் பங்களிப்பு மிகப்பெரியது. எமது போராட்டம் முனைப்புப்பெற்ற 1984 இல் எமது தேசியத்தலைவர் அவர்களால் தமிழீழ மருத்துவத்துறை உருவாக்கப்பெற்றது. தொடக்க காலத்தில் போராளிகளே துறைசார் அடிப்படைப் பயிற்சியோடு மருத்துவப் பணிகளை மேற்கொண்டனர். இவர்கள் விழுப்புண்ணடைந்த போராளிகளுக்கும் மக்களுக்கும் மருத்துவ உதவிகளை வழங்கினர். மக்களுக்கு உதவும் முதலுதவி மருத்துவ அணியாக “சுதந்திரப் பறவைகள்” அமைப்பினர் செயற்பட்டனர்.

பின்னாளில் பயிற்சித்திட்டங்கள் விரிவாக்கப்பெற்றன. மருத்துவக் கல்லூரிகள் உருவாக்கப்பெற்று, போராளிகள் முறையான மருத்துவக் கல்வியறிவு ஊட்டப்பெற்றனர். பெரும் பணியாற்றக்கூடிய வலிமைமிக்க அணியாக மருத்துவப்பிரிவு பெருவளர்ச்சியுற்றது. இதற்குப் பல்வேறு வல்லுனர்களதும் பட்டறிவாளரதும் பங்களிப்புகள் உறுதுணையாகின.

இடப்பெயர்வுகளால் ஏற்பட்ட நெருக்கடியான சூழலில் தமிழீழ மருத்துவப்பிரிவின் மூத்த மருத்துவ நிபுணர்களினதும் போராளி மருத்துவப் பட்டதாரி மாணவர்களினதும் துணையோடு பெரும் மருத்துவ தேவைகள் நிறைவேற்றப்பெற்றன. அரச மருத்துவமனைகளில் காணப்பட்ட மக்களுக்கான குறைபாடுகளைத் தமிழீழ மருத்துவப்பிரிவு நிறைவாக்கியது. வன்னிப் பெருநிலப்பரப்பில் 25 மருத்துவ நிலையங்களுக்கு இந்த ஆளணிகள் வழங்கப்பெற்றன. இதற்கு மேலாகத் தூரக் கிராமங்களில் தியாகி திலீபன் மருத்துவமனை, கௌசல்யன் நடமாடும் மருத்துவ முகாம் போன்றவற்றின் மூலம் மக்களின் தேவைகள் தீர்த்துவைக்கப்பெற்றன.

கண் மருத்துவம், பல் மருத்துவம், நோய்த்தொற்று விழிப்புணர்வுக் கல்வியூட்டல் மற்றும் நோய்த்தடுப்பு வேலைத்திட்டங்களில் குறைந்த வளங்களைக் கொண்டு கடுமையாக உழைத்ததன் மூலம் தமிழீழ சுகாதாரப்பிரிவு பாரிய வெற்றிகளை ஈட்டியது. சிறிலங்காவின் அனைத்து இடங்களையும் விட எமது பிரதேசங்களில் தொற்றுநோய்க் கட்டுப்பாடு வியப்பூட்டியது. யாழ்ப்பாண இடப்பெயர்வுக்குப் பின்னர் வன்னிப்பகுதியில் பெருமளவில் பரவிய மலேரியாக் காய்ச்சல் மற்றும் 1998 இல் உலகை உலுக்கிய கொலரா நோய் போன்றன தமிழீழத்தில் பரவவிடாது தடுத்த பெருந்திறன் தமிழீழ மருத்துவப்பிரிவிற்கே உரித்தானது. இன்று உலகையே அச்சுறுத்தும் கொரோனா நுண்ணுயிர்த்தொற்று தனிமைப்படுத்தலுக்கு நிகரான செயற்பாடுகளைத் தமிழீழ மருத்துவப்பிரிவு அன்று முன்னெடுத்திருந்தது. இடம்பெயர்ந்த சூழலில் நெருக்கமான மக்கள் வாழ்விடங்களில் இந்நோய்கள் பரவும் நிலை தோன்றியது. அந்நிலையில், நோய்த்தொற்று ஏற்படாதவாறு தனிமைப்படுத்தல் முறைகளைக் கையாண்டு உயிரிழப்பு எண்ணிக்கைகளைத் தமிழீழ மருத்துவப்பிரிவு கட்டுப்படுத்தியது.

2006 இலிருந்து எம்மினத்தின் மீதான இறுதிப்போர் உச்சமடைந்தது. நோயாளர் காவுவண்டிகள், தொண்டு நிறுவன ஊர்திகள், உணவு வழங்கல் ஊர்திகள் என அனைத்து வாகனங்களின் மீதும் ஆழ ஊடுருவும் அணிமூலம் தாக்குதல் நடத்தி மருத்துவச் செயற்பாடுகளையும் வழங்கல்களையும் இலக்கு வைத்தது சிறிலங்காப்படை. மருத்துவமனைகளும் தொடராக ஒவ்வொன்றாகத் தாக்கியழிக்கப்பட்டன. ஒரே மருத்துவமனை மீண்டும் மீண்டும் தாக்கப்பட்டது. பல பெறுமதிவாய்ந்த மருத்துவ ஆளணியினர் கொல்லப்பட்டனர். பட்டறிவு மிக்க பட்டதாரி மருத்துவப் போராளிகள் கடமைகளின் போது வீரச்சாவடைந்தார்கள்.

காயமடைந்த மக்கள் மருத்துவ சிகிச்சைகளின்போது மருத்துவமனைகளின் மீது நடாத்தப்பட்ட தாக்குதல்களாலும் கொல்லப்பட்டார்கள். தொடர்ச்சியான தாக்குதல்கள், குண்டுச் சிதறல்கள் நடுவிலும் கடும் ஆளணிப் பற்றாக்குறையின் போதும் மருத்துவ சேவைகளுக்குத் தடை ஏற்படாதவாறு இந்த அணிகள் பார்த்துக்கொண்டன. காயமுற்ற மக்களுடன் மருத்துவர்கள், தாதிகள், மருத்துவப் போராளிகளும் அடங்குவர். மருத்துவப் பணியிலிருந்தவர்கள் காயமடைந்தபோதும் உயிர்காத்தற்பணிகளில் தொடர்ந்து ஈடுபட்டார்கள். உடலில் செருகிய வெடித்துவிடக்கூடிய கொத்துக்குண்டு, உந்துகணைகளைத் தம்முயிரைப் பொருட்படுத்தாமல் எறிகணைகள் நடுவே நின்று அறுவைச்சிகிச்சை மூலம் அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

இவ்வாறு உயிர் காக்கப்பட்டவர்களில் பாரிய காயங்களுக்கு உள்ளானவர்களுள் ஒரு பகுதியினர் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் ஏற்றப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப்பெற்றார்கள். 2009 மே மாதம் 16 ஆம் நாள்வரை தமிழீழ மருத்துவப்பிரிவு தனது கடமையைத் தமது மக்களுக்கு ஆற்றியது.

நன்றி, வணக்கம்.